# MINVELI MEDIA WORKS

## ‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’ திரைப்படத்தின் நடிப்புப் பயிலரங்கம்

‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’ திரைப்படத்தின் படப்பிடிப்பு உடுமலைப்பேட்டைப் பகுதிகளில் நடந்து வருகிறது. உடுமலை வட்டார மில் தொழிலாளிகளின் வாழ்க்கைப் பின்னணியில் அழகான ஒரு காதல் கதையைச் சொல்லும் இத்திரைப்படம் ஒவ்வொரு கட்டத்திலும் நேர்த்தியாக திட்டமிடப்பட்டு உருவாகிறது.

ஹாலிவுட் பாணியில் ‘காஸ்டிங் டைரக்டர்’ (Casting Director) எனப்படும் கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகர்களை தேர்வு செய்யும் பொறுப்பை விருமாண்டியில் ‘பேய்க்காமன்’ கதாபாத்திரத்தில் நடித்த சண்முகராஜா ஏற்றுள்ளார். சண்முகராஜா டெல்லியில் உள்ள தேசிய நாடகப் பள்ளியில் பயிற்சி பெற்றவர். ‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’ திரைப்படத்தின் மூலம் ‘காஸ்டிங் டைரக்டர்’ எனப்படும் ‘நடிகர் தேர்வு இயக்குனர்’ என்ற ஒரு துறை தமிழ் சினிமாவில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

புதுமுகங்கள் அறிமுகமாகும் இத்திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கும் நடிகர்களுக்கு ‘நடிப்புப் பயிலரங்கம்’ ஒன்றும் படப்பிடிப்பிற்கு முன்னதாக நடைபெற்றது. சண்முகராஜா அவர்களால் நடத்தப்பட்ட இப்பயிலரங்கம் மூலம் நடிகர்களுக்கு ‘நடிப்புக் கலை’யின் பல்வேறு அம்சங்கள் கற்பிக்கப்பட்டன.

தனபால் பத்மநாபன் எழுதி இயக்கும் இப்படத்தின் கதை 1950-களில் தொடங்கி 1980-களின் இறுதி வரை நடக்கிறது. அந்தக் காலகட்டங்களைத் திரையில் கொண்டுவர படத்தின் தொழில்நுட்பக் கலைஞர்கள் கடும் உழைப்பைக் கொடுத்து வருகிறார்கள். மின்வெளி மீடியா ஒர்க்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

No.9, 74th Street, 12th Sector, KK Nagar, Chennai – 600078.
Ph: 044 42135901, 42135902, 42135903
www.minveli.com